## <u>இலங்கை நிர்வாக சேவையின் II ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை</u>
## <u>I ஆம் தரத்துக்கு தரமுயர்த்தல்</u>

இலக்கம் 1842/2 மற்றும் 2013.12.23 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவையின் இலக்கம் 2137/5 மற்றும் 2019.08.19 திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 31/2019 இன் ஏற்பாடுகளுக்கமைய, 2013.05.02 திகதிய ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. I ஆம் தரத்துக்கு தரமுயர்த்துவதற்காக முழுமைப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் பதவியுயர்வு முறைமை

பின்வரும் தகைமைளைப் பூர்த்தி செய்துள்ள II ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் I ஆம் தரத்திற்கு தரம் உயர்த்தப்படுவார்கள்.

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றிலிருந்து வழங்கப்பட்ட பொது நிருவாகம், முகாமைத்துவம், அரச கொள்கைகள், மனித வள முகாமைத்துவம், பொருளியல், அபிவிருத்தி பொருளியல், சமூக அபிவிருத்தி, சட்டம், நிதி முகாமைத்துவம், செயற்திட்ட திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயத் துறைகளில் அல்லது இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பலவித முகாமைத்துவப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருப்பது உசிதமானது என்ற இலங்கை நிர்வாக சேவை விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு விடயப் பரப்பில் அல்லது குறைந்தபட்சம் ஒரு விடயத் துறைக்கு உரித்தான பட்டப் பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

II. சேவை தொகுதியில் தரம் II இல் குறைந்தபட்சம் ஆறு (06) வருடங்கள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் ஆறினை (06) உழைத்திருத்தல்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு ஏற்ப தரமுயர்த்தும் தினத்திற்கு முன்னரான ஆறு (06) வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விடக் கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை குறித்த திகதியில் பூர்த்தி செய்திருத்தல்

V. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் நடாத்தப்படுக்கின்ற இயலளவு விருத்தி மட்டம் III ஆம் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றிருக்காதிருத்தல்.

03. மேற்படி 02 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி நிரப்பப்பட்ட விண்ணப்பத்தை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மூலம் பின்வரும் முகவரிக்கு 2025.06.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

(கவனத்துக்கு. : மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் உள்நாட்டலுவல்கள் பிரிவின் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.)

பணிப்பாளர் ( இ.நி.சே)
இலங்கை நிர்வாக சேவைகள் பிரிவு
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

04. உயர்த்துவதற்குரிய விண்ணப்பத்தினை "இணைப்பு 01" இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மென்பிரதியை கீழ்வரும்படி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்யலாம்.

www.pubad.gov.lk → சேவைகள் → இலங்கை நிர்வாக சேவை → தரவிறக்கம் செய்தல்

அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

திகதி : 2025.04.30

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 011-2698605
தொலைநகல் : 011-2683651
மின்னஞ்சல் : pubad.dslas@gmail.com